வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3988/ஆ5/2024, நாள். 19/11/2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – குழந்தை நலம் – மத்திய அரசின் திட்டமான BBBP (Beti Bacho Beti Padhao) – பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி, திறன் மேம்பாடு, பாதுகாப்பு, சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்க இத்திட்டம் தொடர்பாக பள்ளி சுவர்களில் ஸ்லோகன் எழுதுதல் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு நிதி அனுப்பப்பட்டுள்ளது – பயனீட்டு சான்று நேரில் சமர்பிக்க கோருதல் – தொடர்பாக

பார்வை

1. வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி
2. இவ்வலுவலக இணையதள சுற்றறிக்கை நாள். 03.10.2024
3. வேலூர் மாவட்ட சமூகநல அலுவலரின் கடித ந.க.எண்.1141/அ/2022, நாள். 01.10.2024 மற்றும் 04.11.2024

.....

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி திறன்மேம்பாடு, பாதுகாப்பு, சமுதயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்கும் பொருட்டு "பெண்மையை போற்றி காக்க ஆத்திச்சூடி" பள்ளி சுவர்களில் எழுதுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பள்ளி சுவர்களில் ஆத்திச்சூடியினை எழுதும்போது அதில் "பெண்குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற Logo–வை சேர்க்குமாறு பார்வை 2–ன் படி இவ்வலுவலக இணையதளம் மூலம் ஆத்திச்சூடி மற்றும் Logo இணைத்து அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

இப்பொருள் சார்பாக பள்ளி சுவர்களில் பெண்மையை போற்றி காக்க ஆத்திச்சூடியினை எழுதும் பொருட்டு வேலூர் மாவட்ட சமூகநல துறை மூலமாக ஒவ்வொரு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ. 1481/– வீதம் தலைமையாசிரியர் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இதற்கான பயனீட்டு சான்று பார்வை 3–ன் படி 04.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டுள்ளது.

எனவே அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் "பெண்குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற Logo–வுடன் பள்ளி சுவர்களில் ஆத்திச்சூடியினை எழுதப்பட்டதற்கான புகைப்படம் மற்றும் பெறப்பட்ட ரூ. 1481/–க்கான பயனீட்டு சான்றினை இவ்வலுவலக ஆ5 பிரிவில் 22.11.2024–க்குள் தவறாமல் நேரில் சமர்பிக்குமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், பள்ளி சுவர்களில் எழுதப்பட்ட பெண்மையை போற்றி காக்க ஆத்திச்சூடியின் புகைப்படத்தினை மாவட்ட சமூகநல துறை ஒருங்கிணைப்பாளரின் கைபேசி எண்ணிற்கு (9952638577) அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பயனீட்டு சான்று

19/11/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல் –
வேலூர் மாவட்ட சமூகநல அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

வேலூர் மாவட்டம்

"பெண்மையை போற்றி காக்க ஆத்திச்சூடி"

பயன்பாட்டுச் சான்றிதழ்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி திறன்மேம்பாடு, பாதுகாப்பு, சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்கும் பொருட்டு "பெண்மையை போற்றி காக்க ஆத்திச்சூடி" பள்ளி சுவர்களில் எழுதவதற்காக வேலூர் மாவட்ட சமூகநல துறை மூலமாக PFMS வாயிலாக கீழ்காணும் வங்கி கணக்கில் வரப்பெற்ற தொகை ரூ. 1481/- (ரூபாய் ஓர் ஆயிரத்து நானூற்று எண்பத்தி ஒன்று மட்டும்) முழுமையாக பயன்படுத்தப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | வங்கி கணக்கு எண் | வங்கி IFSC குறியீடு எண் | வங்கி கணக்கில் பணம் வரப்பெற்ற நாள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

தலைமையாசிரியரின் கையொப்பம்

முத்திரையுடன்